Regd. M 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-6 / பர்மா, மலேயா, 0-2-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 27-7-1946 ஆடிமீ 12உ } மலர் 42

## மதமும்— மனித சமதர்மமும்

### பெரியார் பேச்சு

உலகில் உள்ள மக்கள் அனைவரையும் பீடித்திருக்கும் ஒரு பெரும் வியாதி கடவுள்கள், மதங்கள் என்னும் இரு தொத்து நோய்களேயாகும். இவற்றுள் கடவுள்கள் நோயைவிட மதங்கள் நோய் என்பது மிகமிகக் கொடியதாகும்.

உண்மை கடவுள் என்கிற தத்துவத்தால் மக்கள் பிரிக்கப்பட்டிருக்கவில்லை; ஆனால் எப்படிப்பட்ட மதத்தாலேயும் மக்கள் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏன் இப்படிச் சொல்லுகிறோம் என்றால் கடவுளைப்பற்றிய ஒரே கருத்துள்ளவர்கள், மதத்தால் வேறுபட்டவர்களாகப் பிரிக்கப்பட்டவர்களாக இருந்து வருகிறார்கள். ஆனால் கடவுளைப்பற்றிய வேறு வேறு கருத்துள்ளவர்களும் மதத்தால் ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

உதாரணமாக ஒரே கடவுள் அதுவும் உருவமற்ற கடவுள் என்கின்ற எண்ணமுள்ள முஸ்லீம், கிருத்தவர், பிரம்மசமாஜத்தார் முதலிய ஏகதெய்வ கொள்கைக்காரர்களும் மதம் காரணமாக வேறுபட்டிருக்கிறார்கள். பலவிதமான கடவுள் தன்மை கொண்டவர்களும் கடவுளே இல்லை என்பவர்கள் மாயாவதி, சூனியவாதி, உலகாயுதவாதி, இயற்கைவாதி, சார்வாகன் வேதாந்தி முதலிய பலரும் மதம் காரணமாக இந்துக்களாகவே இருந்து வருகிறார்கள். எனவே, மக்களைப்பிரித்து வைத்திருப்பதற்குக் கடவுளைவிட மதமே முக்கிய காரணமாக இருந்துவருகிறது.

கடவுள் உணர்ச்சி வேறுபல காரணங்களுக்குக் கேட்டை விளைவிப்பதாக இருந்தாலும் உலக பொது நலனுக்கும் ஒற்றுமைக்கும் கேடு உண்டாக இடம்தராது. மக்களுக்கு ஒன்றுபோல் கேடுசெய்து வருவது மதங்களேயாகும்.

கடவுள்கள் திருத்தத்திற்கு உட்பட்டவைகளாகலாம். ஆனால் மதம் திருத்துப்பாட்டுக்கு இடம் கொடுப்பதில்லை. மதத்தின் அழிவுதான் திருத்தம் என்று சொல்ல வேண்டி இருக்கிறது.

மதம் பெரிதும் சடங்கையும் காரியத்தையுமே அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. ஆதலால் மதம் என்பது ஒரு மனிதனின் செய்கை, நடப்புஆக இருக்கவேண்டி இருப்பதால் வெளிப்படையாக பிரிந்திருக்கவேண்டியதாகிறது. கடவுளைப்பற்றிய கருத்து இரகசியமாக வேறு யாருக்கும் தெரியாததாக இருக்கலாம். ஆதலால் கடவுளைப்பற்றி ஒருவருக்கொருவர் மாறு அபிப்பிராயம் கொண்டவர்கள் ஒன்றாக இருக்கலாம். அதனால்தான் மனிதன் கடவுளை ஏமாற்றுகிறான். ஆனால் மதம் வெளிப்படையாய் வேஷம்போட்டு நடித்துத் தீரவேண்டியதாகவே இருக்கிறது. ஆதலால் ஒரு மனிதன் மதத்தை ஏமாற்றமுடியாது ஏமாற்றினால் தெரிந்துவிடும்.

ஆகவே மனிதசமுதாயத்தை ஒன்றுபடுத்தவும், சமதர்மம் தழைத்து ஓங்கவும் மதங்களே முதலில் அழிக்கப்பட வேண்டும். ஏனெனில் கடவுள் முன்னிலையில் மக்கள் யாவரும் ஒன்று என்று சொல்லி சமத்துவத்தையும் துவக்கலாம்! ஆனால் மதங்களின் முன்னிலையில் எல்லா மத மக்களும் ஒன்று என்று சொல்லிவிட முடியாது. மதங்களாலேயே மக்கள் வேறுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். எனவே மக்கள் யாவரும் ஒன்று, சரிசமம் என்றால் மதங்கள் அழிய வேண்டி வந்துவிடுமாதலால் மதங்கள் மக்களை ஒன்றுப்படுத்த சம்மதியா.

இந்தியாவில் அனேக மதங்கள் இருக்கின்றன. அனேகமாக இந்தியாவின் பூர்வ குடிகளே இன்று எல்லா மதக்காரர்களாகவும் இருந்துவருகிறார்கள். ஆரியர்களும், மங்கோலியர்களும் சில மதங்களில் கலந்து இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையுடையவர்களாகத்தான் இருக்கக்கூடும். ஆனாலும் இந்தியப் பூர்வ குடிகளுக்கு என்ன மதம்? என்ன கொள்கை? இருந்தது என்று காட்டும் ஆதாரம் எதுவுமே காணக்கிடைப்பதில்லை. விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் ஆரியர் இந்நாட்டிற்கு வருவதற்குமுன் இங்கு என்ன மதம் இருந்தது என்பது இதுவரை யாராலும் தெளிவாக்கப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆரியர் இந்நாட்டுக்கு வரும்முன் சீதம், நீர், இடம் காரணமாக மக்கள் பழக்கவழக்க இயற்கைத்தன்மைகளில் பேதம் இருந்ததாகக் காணப்படுவதல்லாமல் மதம், மதத்தின் பயனாய் ஏற்பட்ட வேஷம், சடங்கு, ஜாதி என்பவைகள் காரணமாக பேதம் பிரிவு இருந்ததாகச் சொல்லுவதற்கு அறிகுறி

களைக் காண முடியவில்லை.

மதங்கள் பிரிவினைக்கும், பேதத்திற்கும் காரணமாய் இருப்பது மாத்திரமல்லாமல் மடமைக்கும், மூட நம்பிக்கைக்கும் காரணமாக இருக்கின்றன. பயத்தின் அஸ்திவாரத்தின் மீது கடவுள் இருக்கிறார் என்றாலும் மூடநம்பிக்கை, மடமை என்கின்ற அஸ்திவாரத்தின்மீதே மதங்கள் இருக்கின்றன. இம்மாதிரி மதங்களேதான் கடவுளையும் சிறைப்படுத்திவிட்டன என்பது மாத்திரம் அல்லாமல் எதற்குஆக கடவுள் தேவை என்றும் சொல்லப்படுகின்றதோ, எதற்குஆக கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று எண்ண மக்கள் செய்யப்படுகின்றார்களோ அதற்கு மாறாகப் பலன் உண்டாகும்படி மதங்கள் செய்துவிடுகின்றன.

மற்றும் எந்த மதமும் மக்களுடைய இயற்கைக் குறைபாடுகளைப் பரிகாரம் செய்யவில்லை என்பது மாத்திரமல்லாமல் மதங்களால் மக்களுக்குப் பல செயற்கைக்குறைபாடுகளும் உண்டுபண்ணப் படுகின்றன. எனவே மனித தர்மவாதி, மனித சமதர்மவாதி, (மனித) ஜீவகாருண்யவாதி, மதங்களால் பாதிக்கப்படாதவனாகி மதங்களில் இருந்து வெளிவந்து அல்லது மதங்களுக்கெல்லாம் மேம்பட்டவனாக இருந்துகொண்டு தொண்டாற்ற வேண்டியவனாகிறான்.

## காங்கரசும் முதலாளி முறையும்

ஐக்கிய மாகாணக் காங்கரஸ்காரர்கள் ஜமீன்தார் முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்கள். முஸ்லிம்லீக்குக்காரர்கள் இதை முழுமனதோடு ஆதரித்துவிட்டு தொழிற்சாலை முதலாளித்தன்மையையும் ஒழியவேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டுவந்தார்கள். காங்கரஸ்காரர்கள் இத்திருத்தத்தை எதிர்த்தார்கள்; சபாநாயகர் திருத்தத்தை அனுமதித்தார். முடிவு எப்படி இருந்தாலும்சரி காங்கரஸ்காரர்கள் முதலாளிகளின் கையாட்கள் என்பதை வெளிப்படுத்தவே இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது என்று லீக்காரர்கள் சொன்னார்களாம்.

## பேராசிரியர்களுக்குப் பாராட்டு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறிஞர் அ. சிதம்பரநாதனார் M. A., Ph. D. அவர்கள் தமிழ்ப் பகுதியின் தலைவராகவும், பேராசிரியராகவும் தோழர் T. P. நவநீத கிருஷ்ணன் M.A. அவர்கள் பொருள் துவணைப்பகுதித் (Physics Department) தலைவராகவும், பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டிருக்கும் செய்திகேட்டு யாம் பெரிதும் மகிழ்கின்றோம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், இந்தி எதிர்ப்பு காலத்தில், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கப் பாடுபட்ட தோழர் டி. பி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை எம்.ஏ.,பி.எல்., எம்.ஓ.எல். அவர்கள் தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நியமிக்கப்பட்டபோழ்து வெறுப்புற்றிருந்த பல தமிழ்மக்கள் அறிஞர் அ. சிதம்பரநாதனார் பேராசிரியராக வந்த செய்திகேட்டு மிகவும் மகிழ்வெய்துகின்றனர்.

அறிஞர் அ. சிதம்பரநாதனார் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ் ஆசிரியர்களின் உயர்வுக்கும், தமிழ் நாட்டின் விடுதலைக்கும் பாடுபடுவதையே குறிக்கோளாகக்கொண்டவர். எனவே அன்னார் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்றமையான் தமிழ் மக்கள் பெரிதும் பயனடைவர் என்பது உறுதி. (ஆ-ர்)

## மணமகள் தேவை

விடுதலைபெற்ற ராணுவ அதிகாரியாகிய 25-வயதுள்ள, ஆங்கிலம், தமிழ் நன்கு படித்த, நல்ல தேகக் கட்டுள்ள, நடுத்தர அந்தஸ்துள்ள வ. கு. க்ஷத்திரிய வகுப்பைச் சார்ந்த, தீவிர சு. ம. பற்றுள்ள இளைஞருக்கு, 20 வயதுக்குட்பட்ட, நன்கு படித்த, அழகுள்ள, வகுப்பு வேற்றுமை இல்லாத, சு. ம. திருமணத்துக்கு இசைந்த, சு. ம. மணமகள் தேவை. முழு விவரத்துக்கு,

V. P. கோபாலகிருட்டினன்,
குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

## காங்கரஸ் (பார்ப்பன) ஆட்சியின் அலங்கோலம்

காங்கரஸ் ஆட்சிக்கு வந்தபிறகு சுமார் 10, 15 பெரும் கலவரங்கள் நடந்துள்ளன. பலமக்கள் உயிர் இழந்தனர். 20, 30 லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாயின. சுமார் 300, 400 பேர்கள் பலத்த அடியும் காயமும் அடைந்து இருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் கலவரம் நடந்துகொண்டே இருக்கிறது. இக்கலவரங்களிலெல்லாம் பெரிதும் காங்கரசல்லாதவர்களே கஷ்டத்துக்கும் நஷ்டத்துக்கும் ஆளாகி இருக்கிறார்கள். காங்கரஸ் ஆட்சி போலீசார் நடவடிக்கைகளை வாபீஸ்பெறும்படியும், தண்டனைகளை ரத்துசெய்யும்படியும் உத்திரவு போட்டவண்ணம் இருக்கிறது. பொதுவாக முஸ்லிம்களும் திராவிடர்களுமே அடிபட்டவர்களுமாவார்கள். இந்த நிலையில் திராவிட கழகத்தாரிடம் நல்ல நடவடிக்கைக்கு ஜாமீன் வாங்கும் நடவடிக்கை பல ஊர்களில் அதிகாரிகள் துவக்கி இருக்கிறார்கள்.

முஸ்லிம் ஆட்சியோ, அசல் பிரிட்டிஷ் ஆட்சியோ இதைவிடக் கொடுமையாய் இருக்குமென்று யாராவது சொல்லக்கூடுமா?

பிரஞ்சிந்தியா ஆட்சியையும், மற்றும் ஜப்பானியர் சிங்கப்பூரில் செய்த ஆட்சியையும், நம் காங்கரஸ் ஆட்சி, மிக யோக்கியமான ஆட்சிகளாய் ஆக்கிவிட்டது என்னலாம்.

மந்திரிகள் பார்ப்பனர்கள் ஆனதால், அடியும் நட்டமும் அடைபவர்கள் பார்ப்பனரல்லாதார் ஆனதால் கலகமும், காலித்தனமும் வளரவும், நீதி, பேய்நீதியாக இருக்கவும் முடிகிறதென்பதல்லாமல் மக்களிடம் அதிக தவறு கூறமுடியாது என்போம்.

## பிறப்பு

7-7-46ல் திண்டிவனத்தில் வந்தவாசி திராவிடர் கழகச் செயலாளர் தோழர் டி. எஸ். வாசன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் சரஸ்வதியம்மை அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. குடியரசு, திராவிடநாடு, விடுதலை ஆகியவற்றிற்குத் தனித்தனியே இரண்டுரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

எத்தனைபேர்? இவ்விரு பள்ளிகளிலும் சேர்ந்தே மொத்தம் நூற்றுக்கு மூன்று திராவிட ஆசிரியர்கூட இருக்கமாட்டார்கள் என்பதை நம்மால் பந்தயங் கட்டிக் கூறமுடியும்.

ஆசிரியர்களே ஆரியர் மயமானால், சேர்க்கப்படும் பிள்ளைகள் யாராயிருப்பார்கள் என்பதைக்கூற, சோதிடனா வேண்டும்?

இந்த மாதிரி நிலைமையில் திராவிட இனத்தில் உயர்தரப் படிப்புப் படித்தவர்களின் தொகை மிகக்குறைவாயில்லாமல் வேறு எப்படியிருக்க முடியும்?

திராவிடச் செல்வந்தர்களும், படித்த கூட்டத்தாரும், பட்டம் பதவி பெற்றவர்களும் திராவிடரின் முற்போக்குக்காக வேறு எந்தத்தியாகத்தைச் செய்யாவிட்டாலும், திராவிடரின் பிறவி எதிரிகளையாவது தூக்கிவிடாமல் இருக்கக்கூடாதா? நல்ல பாம்புக்குப் பாலூற்றி வளர்க்கும் துரோகச் செய்கை, என்றாவது ஒருநாள் தங்களுக்கே பேராபத்தாகமுடியும் என்பதை இப்போதேனும் உணரக்கூடாதா? இவர்கள் மனம், என்ன பாறையாக மாறிவிட்டதா? நமக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

மந்திரிசபையாருக்கு ஒரு வார்த்தை? நீங்கள் ஆரியத் திற்குத் துணையாயிருக்கும் துணிவைக்கொண்டு, ஜாதித் திமிர் தலைவிரித்தாடுகிறது! என்ன இருந்தாலும் கல்வி மந்திரியார் திராவிடர்தானே என்று கருதி நம்பியிருந்தோம்! அந்த நம்பிக்கையிலும் மண் விழுந்துவிட்டது. திராவிடர் அறிவு வளர்ச்சியை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், மாணவர் சேர்க்கை விஷயத்தில் ஆரியப் பார்ப்பனர் கல்நெஞ்சத்துடன் காரியத்தை நடத்தி வருகின்றனர். இதன் விளைவு என்னவானாலும் சரி; அதற்குப் பொறுப்பாளி பார்ப்பனீயத் திமிரும் அதை ஆதரிக்கும் மந்திரிசபையுமேயாகும் என்பதை எச்சரித்துக்கூறுகிறோம்.

"நடந்தது நடக்கட்டும்; நாம் இதில் தலையிட வேண்டாம்" என்று மந்திரிசபையார் நாட்களை எண்ணிக்கொண்டேயிருப்பார்களேயானால், திராவிட இனத்தின் புண்பட்ட நெஞ்சில் வேலால் குத்திய பழியை ஏற்றுக்கொள்ள நேரிடலாம்: எச்சரிக்கிறோம்!

# பார்ப்பனீயத் திமிர் தாண்டவமாடுகிறது!

★

## மாணவர் சேர்க்கை விவரம்

26-6-46 முடிய சென்னை உயர்தரக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் வகுப்பு வீதாச்சாரக் கணக்கு இதன்கீழ் தரப்படுகிறது. தேசியம் பேசும் திராவிடத் தோழர்கள் கருத்தூன்றி இதனைக் கவனித்துப் பார்க்க வேண்டுகிறோம். அப்பொழுதுதான் அவர்களால் காங்கரஸ் தேசியத்தின் உண்மை நிலையை உணரமுடியும்.

| கல்லூரிகள் | 100க்கு பார்ப்பனர் | திராவிடர் | முஸ்லிம் கிறிஸ்தவர் | தாழ்த்தப் பட்டோர் |
|---|---|---|---|---|
| சென்னை மாகாணக் கல்லூரி | 40 | 28 | 24 | 8 |
| லயோலா கல்லூரி | 68 | 14 | 16 | 2 |
| கிறிஸ்துவக் கல்லூரி | 51 | 21 | 26 | 2 |
| பச்சையப்பன் கல்லூரி | 37 | 50 | — | 13 |
| விவேகானந்தர் கல்லூரி (புதிது) | 93 | 7 | — | — |
| மொத்தம் | 58 | 24 | 13 | 5 |

—"தொழிலாளர் மித்திரன்"

## தஞ்சை மாவட்டத்தில் பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், தோழர் நெடுஞ்செழியன் அவர்களும் தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்ட தனி பிளஷர் காரில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

31-7-46 குற்றாலம்
1-8-46 மாயவரம்
2— பேரளம்
3— திருத்துறைப்பூண்டி
4— அதிராம்பட்டினம்
5— பட்டுக்கோட்டை
6— அரந்தாங்கி

7, 8—தேதிகளில் கூட்டம் நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும். போகும் வழியில் பெரியார் அவர்களுக்கு வரவேற்பும் உண்டு. ஆங்காங்குள்ள தோழர்கள் தக்க ஏற்பாடுசெய்யும்படி தோழர் வி. எஸ். பி. யாகூப் கேட்டுக்கொள்கிறார்.

குடி அரசு

1946-ளு ஜூலை-மீ 27உ

# பிரிட்டிஷ் தூது கோஷ்டி

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் தூதுகோஷ்டியார் இந்தியாவுக்குவந்து, இந்தியசுதந்திரம்பற்றி காங்கரஸ், முஸ்லிம்லீக் ஆகிய இரண்டு ஸ்தாபனங்களை மாத்திரம் இந்தியாவாகக் கருதி அவற்றின் நிர்வாகிகளுடனும், தலைவர்களுடனும் மாதக் கணக்கில் விவாதம் செய்தார்கள். அவர்கள் மற்ற கட்சியாரைப்பற்றி லட்சியம் செய்யவில்லை என்பதோடு, ஏதோ ஒரு விதத்தில் பேச்சு முடிவுற்றதாகச் சொல்லிக் கொண்டு கப்பலேறிவிட்டார்கள்.

தூதுகோஷ்டியாரும், காங்கரஸ் முஸ்லிம்லீக் என்கின்ற இரண்டு ஸ்தாபனக்காரரும் முறையே கணவன், மனைவி போல் இருந்து விஷயம் பேசினார்கள். தூதுகோஷ்டியார் என்கின்ற கணவன் காங்கரஸ், லீக் என்ற இருமனைவிகளிடம் சிக்கிக்கொண்டு வெகு தொல்லைப்படுவதாகக் காட்டிக் கொண்டார்கள்.

அதாவது "முரட்டுப் பெண்டாட்டியும், சுருட்டைப் பாயும்" என்று ஒரு கதை உண்டு. "ஒருவனுக்கு ஒரு மனைவி உண்டு. அவள் மகா முரட்டுச் சுபாவம் கொண்டவள். அவளைக் கணவன் பக்கத்தில் கொண்டுவந்து படுக்கவைக்க வேண்டுமானால் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டுவந்துதான் உட்காரவைத்து அமர்த்தவேண்டும். இந்த நிலையில் உள்ள கணவனுக்கு ஒரு பாய்தான் உண்டு. அது சுருட்டைப்பாய். அது சுருட்டிக்கொண்டு உருண்டை பாய்ச் சுற்றிவைத்தபாய்போல் சுருண்டு இருக்கும். அதை விரிக்கவேண்டுமானால் ஒரு பக்கம் காலில் மிதித்துக் கொண்டு இரண்டுகையாலும் விரித்துக்கொண்டே போய் உடனே உட்கார்ந்து படுத்துக் கொள்ளவேண்டும். இந்த நிலையில் கணவன் என்ன செய்வான்? பாயை விரிக்க ஆரம்பித்தால் மனைவி எட்டிப்போய் உட்கார்ந்து கொள்கிறாள். மனைவியை இழுத்துக்கொண்டு வரப்போனால் பழயபடி பாய் சுருண்டுகொள்கிறது. ஆகவே இரவு முழுவதும் கணவன் பாயைவிரிப்பதும்; ஓடிப்போய் மனைவியை இழுப்பதும், அதற்குள் பாய் சுருண்டு கொள்வதால், அதை விரிக்க ஆரம்பித்தவுடன் மனைவி ஓடிப்போவதைக் கண்டு மீண்டும் அவளை இழுக்கப்போவதுமாய் நடமாடிக்கொண்டிருந்து பொழுது விடிந்ததும் தன் முயற்சி பயனளிக்காது போகவே அவன் வேலைக்குப் போய்விடுவதும் வழக்கம்." இதுதான் அக்கதையாகும்.

அதுபோலவே காங்கரசும் முஸ்லிம்லீகும் தூதுகோஷ்டிக்கு முரட்டுப் பெண்டாட்டியும் சுருட்டைப் பாயுமாக இருந்து உருப்படியான விஷயம் எதுவும் நடைபெற முடியாமல் போனதால் "விடிந்ததும்" தூதுகோஷ்டியார் ஊர்போய்ச் சேர்ந்துவிட்டார்கள். இந்த நிலையில் தூதுகோஷ்டியார் மற்ற கட்சியாரைக் கூப்பிடவில்லை என்பதில் ஏமாற்றம் ஒன்றும் இல்லை என்றே சொல்லுவோம்.

காங்கரஸ் முஸ்லிம்லீக் ஆகிய இவர்கள் இருவரும் இந்திய மக்களின்முக்கியபிரச்னைக்குப் பிரதிநிதிகளாய் இருக்கிறார்கள் என்று ஒரு விதத்தில் சொல்லலாம். எப்படியெனில் இந்த நாட்டில் முக்கியமாக இரண்டு கொள்கைகள்தான் ஒன்றோடொன்று போராடிக்கொண்டு இருக்கின்றன. அவைகளில் ஒன்று வருணாச்சிரம சனாதன தர்மம்; மற்றொன்று சமுதாய சமதர்ம மாறுதல். இந்த நாட்டில் இன்று உள்ள எல்லா அடிப்படைக் கொள்கைகளும், அவைகளுக்கான கட்சிகளும் இந்த இரண்டுக்குள் ஒருவாறு வந்தாகவேண்டும். விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் காங்கரஸ், இந்துமகா சபை, சமஸ்தானசபை, ஜமீன் சபை, வர்த்தகசபை, பார்சியர் சபை, நிலச்சுவான்தாரர்கள் சபை, பிராமணசபை, வர்ணாச்சிரமசபை முதலியவையாவும் பெரிதும் சனாதனமுறை சபைகளேயாகும். அதாவது இவர்கள் இத்தனைபேரும் ("யதாபிரியன்மார்" என்னும்) "தற்காலஸ்திதி இப்படியே இருக்கவேண்டும்; அதற்கு ஏற்ற பாதுகாப்பு பந்தோபஸ்து செய்யவேண்டும்" என்பதை சுயாட்சி என்பவர்கள். அதாவது இந்தக் கூட்டத்தாருக்குஆகவே இந்தக்கூட்டத்தாராலேயே ஆளப்படும், ஆட்சியைத்தான் இந்தக் கூட்டத்தார் சுயாட்சியாகக் கருதி அதற்கு ஆக வேலைசெய்து வருகிறார்கள். ஆதலால் இவர்கள் தங்கள் கைக்கே ஆட்சி வரும்படியாகச் சுயஆட்சிக்குப் பாடுபடுகிறார்கள்.

மற்றொரு கட்சியார் "மாறுதல் வேண்டும்" என்று கூறுகின்றனர். அதாவது இன்றைய அமைப்பு நிலை திருத்தப்பட்டு யாவரும் ஒரு தன்மையாளர்களாக ஆக்கப்பட முயற்சிக்கும்படியான புதிய—மாறுதல் முறையை விரும்புகின்றனர். இக்கட்சியில் முஸ்லிம் லீக்கு மாத்திரமல்லாமல் பஞ்சமர் என்னும் தாழ்த்தப்பட்ட வகுப்

பாரும், நாலாவதார் சூத்திரர் என்றும் சொல்லப்படுகின்ற ஆகிய திராவிட மக்களும் ஏழைப் பாட்டாளி மக்கள் யாவரும் சேர்ந்தவர்களாவார்கள் என்று சொல்லவேண்டும். காங்கரஸ் பெறும் சுதந்திரத்தின் முற்கூறிய சனாதன வர்ணாச்சிரமக் கூட்டங்களுக்குத்தான் சுதந்திரமும், பயனும் ஏற்படும். லீக்கு பெறும் சுதந்திரத்தினால் பின் கூறப்பட்ட கூட்டங்களுக்கும் ஒரு பெரும் அளவிற்குச் சுதந்திரமும், பயனும் உண்டாகும். கம்யூனிஸ்டுகள் தொழிலாளிகள் என்பவர்கள் உண்மையாய் இருப்பார்களானால் அவர்கள் காங்கரசுக்கு மாறாக இருந்து பின்னால் கூறப்பட்ட கூட்டத்தை (கட்சியை)த்தான் ஆதரிக்கக் கடமைப் பட்டவர்களாவார்கள். ஆனால் இந்த கம்யூனிஸ்ட், தொழிலாளர் என்கின்ற இரு கூட்டத்தாரும் காங்கரசுக்குப் பலம் உண்டாக்கிக்கொள்ள காங்கரஸ்காரர்களால் உற்பத்தி செய்யப்பட்டவர்களானதினால் அவர்கள் ஆணுமல்லாமல் பெண்ணும் அல்லாமல் அர்த்தனாரீஸ்வரர்களாக இருக்கிறார்கள். இவர்கள் என்றைக்கு அடியோடு பட்டாங்கமாக வர்ணாச்சிரமம், பாசிசமாகிய காங்கரசை விட்டு விலகுவதோடு மாத்திரமல்லாமல் கடுமையாக அவற்றை எதிர்த்து நிற்பவர்களாக ஆகிறார்களோ அதுவரையில் வெளவால்களாக வாயிலேயே தின்று வாயிலேயே மலங்கழிக்கும் சுபாவமுடையவர்களாகத்தான் இருக்கமுடியும்.

ஆகவே தாதுகோஷ்டியார், மாறுதல் கொள்கைக்காரர்களாகிய திராவிட கழகத்தாரையும் ஷெடியூல் (தாழ்த்தப்பட்ட) வகுப்பாரையும் கூப்பிடாததால், கூப்பிட்டு மரியாதை செய்யாததால் இவர்களுக்கு நட்டமோ, மோசமோ, அவமானமோ சிறிதும் ஏற்பட்டுவிடவில்லை. லீக் வெற்றி பெற்றிருந்தால் ஒரு அளவுக்காவது நமது (திராவிடர் கழக) கொள்கையும் ஷெட்யூல் வகுப்பு கொள்கையும் வெற்றிபெற்றன என்றுதான் பெரிதும் அர்த்தமாகும். லீக் தோல்வி பெற்றிருந்தால் இந்த இருவர் கொள்கையும் தோல்வி அடைந்தது என்பதுதான் அர்த்தமாகும்.

அதனால்தான் டாக்டர் அம்பேத்கார் அவர்களும் லீக்குடன் ஒத்துழைக்க முன்வந்து திராவிட கொள்கைப்படி "சத்தியாக்கிரக"த்துக்குத் துணிந்துவிட்டார். ஆகவே தாதுகோஷ்டியரால் இதுவரை யாருக்கும் நட்டமும் இல்லை, லாபமும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும் என்பதோடு கஷ்டப்படும் மக்களுக்கு ஒரு உணர்ச்சி உண்டாக்கி இருக்கிறது என்றும் சொல்லலாம்.

தாதுகோஷ்டியாரின் "இடைக்காலத்திட்டம் தோல்விபெற்றுவிட்டது" என்று காங்கரஸ் சொல்லுகிறது.

"இடைக்காலத் திட்டம் நீண்டகாலத் திட்டம் ஆகிய இரண்டும் தோற்றுவிட்டன" என்று முஸ்லிம்லீக்கு சொல்லுகிறது.

காங்கரஸ், லீக்கு சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாமல் நீண்டகாலத் திட்டத்திற்கு முன்திப்பு தயார் செய்கிறது.

இது எதுபோல் இருக்கிறது என்றால் ஆஸ்பத்திரியில் உள்ள ஒரு நோயாளிக்கு டாக்டர் சிலநாள் வைத்தியம் பார்த்து அவனைக் கைவிட்டுவிட்டு "நோயாளி செத்துப்போய் விட்டான், கொண்டுபோய்ப் புதையுங்கள்" என்று சொன்னபோது, நோயாளியானவன் "நான் இன்னமும் சாகவில்லை அய்யா, உயிர் இருக்கிறது" என்று சொன்னவுடன் டாக்டருக்குக் கோபம் வந்து "என்டா நான் டாக்டரா? நீ டாக்டரா? நீ எவ்வளவு படித்தாய்? என்ன பாஸ்பண்ணி இருக்கிறாய்? எனக்கு 26வருட அநுபவம்; நீ நோயாளி; நான் சொல்லுவதைத் தட்டிப் பேசுகிறாயா?" என்று சொல்லி, ஆட்களைப் பார்த்து "அவன் கிடக்கிறான் வைத்தியத்தில் A. B C. கூடத்தெரியாதத் தற்குறி; அவனைக் கொண்டுபோய்ப் புதையுங்கள்." என்று சொன்னதுபோல் இருக்கிறது.

லீக்குக்காரர்கள் "இடைக்காலத்திட்டம் வெற்றிபெற்றால் தான் நீண்டகாலத் திட்டம் வெற்றிபெற்றதாகும்" என்கிறார்கள்.

காங்கரஸ்காரர்கள் "இடைக்காலத்திட்டம் எப்படியானாலும் சரி, நீண்டகாலத்திட்டத்தை நாங்கள் ஒப்புக்கொண்டதால் தாதுகோஷ்டி வெற்றி பெற்றுவிட்டது, நீண்டகாலத் திட்டமும் வெற்றிபெற்று விட்டது என்கிறார்கள். ஆகவே "இராஜாமகளை மணக்க மாப்

## மத்திய திராவிடர் கழகம்

மத்திய திராவிடர் கழக சம்பந்தப்பட்ட எல்லா அலுவல்களும் 1-8-1946 முதல் சென்னையிலிருந்தே கவனிக்கப்படுமாதலால் ஆங்காங்குள்ள திராவிடர் கழக நிர்வாகஸ்தர்களும், பிற தோழர்களும் திராவிடர் கழக சம்பந்தமான எல்லாத் தகவல்களுக்கும் 1-8-'46 முதல் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுத வேண்டுகிறேன்.

செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம்.
விடுதலை ஆபீஸ்,
P. B. No. 325, மவுண்ட்ரோட்,
சென்னை.

பின்னை ஒப்புக்கொண்டுவிட்டதால் அரைக்கல்யாணம் முடிந்தது என்பதுபோல் காங்கரஸ் மகிழ்ச்சி அடைகிறது.

இந்த நிலையில் ஆச்சாரியார் "அரசியல் நிர்ணயசபை காரியம் முடிந்தபிறகுதான் நமக்குள் பெரிய போராட்டம் நடக்கப்போகிறது" என்கிறார்.

ஆகவே திராவிட கழகமும், ஷெட்யூல் வகுப்பும் ஞாது கோஷ்டியார் காரியம் பற்றி சங்கடப்படாமல், ஏமாற்றம் அடைந்துவிட்டதாகக் கருதாமல், இன்றைய நிலையில் தங்களுக்கு எவ்வித நட்டமும் ஏற்பட்டுவிட்டதாகக் கருதாமல், ஆச்சாரியார் சொன்னபடி வரப்போகும் கலவரத்தில், போராட்டத்தில் ஓரளவாவது நம் கொள்கைக்காரர்களாகிய முஸ்லிம்களுடன் கூட இருந்து தோளோடு தோள்கொடுத்து நின்று வர்ணாச்சிரம காந்திய கோஷ்டி வெற்றிபெறாமல் பார்த்துக்கொண்டிருக்கத் தான் கடமையாகும் என்பதை உணரவேண்டும். ஷெட்யூல் வகுப்பாருக்குப் பூனா வழி காட்டுகிறது. திராவிட கழகத்தாருக்கு மந்திரிகளும் காங்கரஸ் காலிகளும் வழிகாட்டுகிறார்கள். முஸ்லிம்களும் பாப்பாரபட்டி, மதுரை, ராமநாதபுரம், திருவண்ணாமலை, வாணியம்பாடி முதலிய ஊர்கள் மூலம் தூண்டப்பெறுகிறார்கள். எனவே இவை இம்மூன்று கூட்டத்தினருக்கும், இனி தங்கள் கடமை என்ன என்று யோசிக்க வழிகாட்டும் படிப்பினை என்றே கருதுகிறோம்.

ஆகவே ஞாது கோஷ்டியார் ஒன்றும் பிரமாதமாகச் செய்து விடவில்லை என்றாலும் நம் சங்கதிகளை, கடமைகளைத் தெளிவுபடுத்தி, முயற்சிகளைச் சற்று அவசரப்படுத்திவிட்டுப் போயிருக்கிறார்கள் என்றே சொல்லுவோம்.

## அரசியல் நிர்ணயசபை தேர்தலும், தாழ்த்தப்பட்ட மக்கள் கடமையும்

அரசியல் நிர்ணயசபை தேர்தல் 22-7-46ந் தேதி நடந்தது.

அதற்குக் காங்கரஸ் சார்பாய் 45 பேர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

காங்கரஸ் ஆதரவுபெறாமல் சுயேச்சையாய் 8-பேர்கள் நின்றார்கள். தேர்தல் முடிவில் காங்கரசால் நிறுத்தப்பட்ட 45-பேர்கள் வெற்றிபெற்றார்கள். சுயேட்சையாக நின்ற 8-பேர்களும் தோல்வியுற்றார்கள்.

வெற்றி பெற்றவர்கள்:-

1. சி. ராஜகோபாலாச்சாரியார்
2. சர் என். கோபாலசாமி ஐயங்கார்
3. கே. சந்தானம்
4. சர் அல்லாடிகிருஷ்ணசாமி ஐயர்
5. டி. டி. கிருஷ்ணமாச்சாரி
6. எம். அனந்தசயனமய்யங்கார்
7. டி. பிரகாசம்
8. டாக்டர் பட்டாபி சீதாராமய்யர்
9. பி. சிவராவ்
10. சீனிவாசமல்லயா
11. துர்க்காபாய்
12. காளா வெங்கிட்டராவ்
13. வர்முசாமிநாதய்யர்
14. கோபங்கா
15. டாக்டர் சுப்பராயணியம்
16. டாக்டர் பி. சுப்பராயன்
17. ஓ. பி. ராமசாமிரெட்டி
18. சி. பெருமாள்ரெட்டி
19. எச். சீதாராமரெட்டி
20. என். சஞ்சீவிரெட்டி
21. பி. கோபாலரெட்டி
22. பொப்பிலி ராஜா
23. என். ஜி. ரங்கா
24. பி. எல். நரசிம்மராஜு
25. கே. சந்திரமௌளி
26. கே. மாதவமேனன்
27. பி. குன்னிராமன்
28. சர் முத்தய்யா செட்டியார்
29. டி. எ. ராமலிங்கசெட்டியார்
30. நாடிமுத்து பிள்ளை
31. எம். சி. வீரபாகுபிள்ளை
32. அழகேசன்
33. சி. சுப்பிரமணியம்
34. கிருஷ்ணசாமி பாரதி
35. காமராஜநாடார்
36. வி. ஐ. முனிசாமிபிள்ளை
37. வேலாயுதபாணி
38. தாக்ஷாயாயணி
39. கக்கன்
40. கோவிந்ததாஸ்
41. வி. சி. கேசவராஜ்
42. நாகப்பா
43. ரெவரெண்டு T. D. யூசா
44. டி. ஜே. எம். வில்சன்
45. எஸ். எச். பிரேட்டர்

தோற்றவர்கள்:-

1. என். சிவராஜ்
2. எம். ரத்தினசாமி
3. எஸ். முத்தய்யா முதலியார்
4. மாணிக்கவேல் நாயக்கர்
5. மாசிலாமணிபிள்ளை
6. பி. சுந்தரப்பா
7. லிங்கேசன்
8. சுப்பிரமணியபட்

அரசியல் நிர்ணயசபைக்கு எல்லா கட்சிக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் யுத்தத்தின் போது வாக்களித்தார்கள். யுத்தம் பிரிட்டிஷாருக்கு வெற்றிகரமாய் முடிந்தவுடன் காங்கரஸ் மாத்திரமே இந்தியாவுக்குப் பிரதிநிதி ஸ்தாபனமாய் இருக்கும்படியான காரியங்களைச்செய்து காங்கரசும் தாங்களுமே ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு மறுபடியும் மனுதர்ம ஆட்சியும், பிரிட்டிஷ் பனியா சுரண்டலும் நடக்கும்படியான அரசியலை ஏற்படுத்தப்போகிறார்கள்; அதற்கேற்ற வண்ணமே அரசியல் நிர்ணயசபை அமைந்துவிட்டது, அமைக்கப்பட்டு விட்டது.

முஸ்லிம்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் என்பதாக அரசியல் நிர்ணயசபையில் சிலர் உட்காரலாம் என்றாலும் அவர்களால் திராவிடமக்களுக்கோ திராவிட நாட்டில் உள்ள முஸ்லிம்களுக்கோ ஒருவித பயனும் ஏற்படமுடியாத மாதிரியில் அது அமைந்துவிட்டது. ஆதிதிராவிடர்கள் என்று சொல்லப்படும் தாழ்த்தப்பட்ட—தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்குச் சில பிரதிநிதித்துவம்கிடைத்திருக்கிறது என்று சொல்லப்பட்டாலும் அது காங்கரஸ் கோலுக்கு அடங்கி ஆடவேண்டிய குரங்குகள் போல் ஆக்கப்பட்ட பிரதிநிதித்துவமாகவே முடிந்துவிட்டது. இந்த நிலையில் டாக்டர் அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு உண்மையான பிரதிநிதியாய், காப்பாளராய் இருப்பாரானால், அவர் துணிவும் வீரமும் உடையவராயிருப்பாரானால் இந்தியாவை ஆரிய-பிரிட்

டிஷ் ஆட்சியிலிருந்தும், கொடுங்கோன்மைஆட்சி முறையிலிருந்தும் மீட்க சாத்யமான முறையில் முயற்சிப்பவராய் இருப்பவராவாரானால், அவர் 1930ல் தான்செய்துகொண்ட முடிவை அதாவது தீண்டப்படாதவர்களாய் கொடுமை செய்யப்பட்டிருக்கும் மக்களும், தானும் இந்து மதத்தைவிட்டு முஸ்லிம் சமயத்தைத் தழுவுவது என்கின்ற காரியத்தை உடனே துவக்கவேண்டியவராவார். அதைத்தவிர இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தையும் சுரண்டலையும் அப்புறப்படுத்தவும் ஆரிய அதிக்கிரமத்தையும், கொடுமையையும், அட்டூழியத்தையும், அழிக்கவும் வேறு மார்க்கம் இல்லை என்றேசொல்லுவோம்.

ஆனால் ஆதிதிராவிட தோழர் சிலருக்குக் கல்வி கொடுத்து அவர்களுக்குப் பெரும் உத்தியோகங்கள் கொடுக்கப்படும் என்கின்ற சக்கரை பூசின விஷ குளிகைகளைப் பிரிட்டிஷார் தெருவில் வீசி இறைத்துவிட்டதால் அதில் மயங்கிப்போய் 5கோடி மக்களை நாய் நரிப் பிராயத்தில் இருந்து மாறுபடாதபடி செய்யப்பட்டுவிட்டது.

ஆகவே இனியாவது ஆதிதிராவிட வகுப்புத் தலைவர்கள் கவலையோடு சிந்தித்து முடிவு செய்யவேண்டிய இந்த சந்தர்ப்பத்தைப் புத்திசாலித்தனத்தோடுப் பயன்படுத்துவார்களாக.

ஆதிதிராவிட சமுதாயத்தில் இப்போதுபடித்துப் பட்டம்பதவி பெற்று இருப்பவர்களும் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பவர்களும் அவர்களுக்குக் கிரமமாய், கிடைக்கவேண்டிய விகிதாச்சாரத்துக்குக் கம்மி இல்லாமல் பெரும்படியாக அந்தந்த மாகாண முஸ்லிம்லீக்கோடு, முஸ்லிம் சமுதாயத்தோடு ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடும் என்றும்; செய்து கொள்ளலாம் என்றும் சொல்லுவோம்.

இனி இந்தியாவில் அல்லது நமது மாகாணத்தில் எந்த வகுப்பாரும் ஏதாவது ஒரு புரட்சிசெய்து வெற்றி பெற்றால் ஒழிய தங்கள் மனிதத்தன்மையை, மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலையிலேயே இருக்கவேண்டி இருக்கிறது.

எனவே இதைத்தவிர வேறு எந்த விதப் புரட்சியாலும் இந்தியப் பழங்

# அம்பேத்கார் அழைப்பு

காங்கரசினுடையவும், பிரிட்டிஷாருடையவும் கூட்டு ஒப்பந்தத்தை எதிர்த்து டாக்டர் அம்பேத்கார் ஒரு கிளர்ச்சி துவக்கி இருக்கிறார். இதில் இதுவரை பம்பாய் மாகாணத்தில் மாத்திரம் 500 பேர்களுக்குமேல் சிறைசென்று இருக்கிறார்கள்.

எல்லா மாகாணத்திலும் துவக்கப்படவேண்டும் என்று டாக்டர் விரும்புவதோடு ஏழைப் பாட்டாளிமக்களின் நலன்களில் பற்றும் அனுதாபமும் கொண்ட யாவரும் இந்தக் கிளர்ச்சியில் சேரவேண்டுமென்று அழைக்கிறார். இந்த மாகாண ஷெட்யூல் வகுப்புத் தலைவர்கள் என்பவர்கள் நடத்தை எப்படி இருந்தாலும் பற்றுள்ள பொதுமக்கள் யாவரும் கிளர்ச்சியை ஆதரிக்க வேண்டும் என்பதாக விரும்புகிறோம்.

---

குடிமக்கள் மீள, வாழ, வகை இல்லை என்பதை உணர்வார்களாக.

ஏன் இதை வலியுறுத்தி இப்படிச் சொல்லுகிறோம் என்றால் இந்திய பூர்வீக மக்களின் நிலையைக்கண்டு வெள்ளையரும், ஆரியரும் இருபட உன்னதத்தவர்களாக ஆகி நிரந்தரமாய் இந்நாட்டாரை அடக்கி, ஒடுக்கி, இழிவுபடுத்தி வைத்து ஆளுகின்றது என்கின்ற துணிவானமுடிவுக்குவந்துவிட்டார்கள். மற்றவர்களை அவர்கள் மனிதர்களாகவே கருதவில்லை. நம் சமுதாயத்தில் உள்ள விபீஷணர்கள், அனுமார்கள் என்பவர்களைக் கொண்டே நம்மை நாசப்படுத்த வசதி செய்துகொண்டுவிட்டார்கள் ஆதலால் புரட்சியைத்தவிர வேறு வழியில்லை என்கின்றோம்.

நாம் காணவேண்டிய அக்கிரம அநீதி அயோக்கியத்தனம் என்பவைகளில் இந்த அரசியல் நிர்ணயசபை அமைப்புமுறையை அதன் முடிவைத் தவிர வேறு ஒன்றை மேலானதாகக் காணமுடியாது. இதற்கும் கூட நமக்கு புரட்சி உணர்ச்சி, மான உணர்ச்சி, பரிகார உணர்ச்சி வரவில்லையானால் இப்போது நடந்ததெல்லாம் சரி, மிகச்சரி, மிகமிகச் சரியான காரியம் என்றுதான் சொல்லவேண்டும்.

# ஜாதித் திமிருக்கும் எல்லையில்லையா?

இப்போதுள்ள கல்வி முறையானது இங்கிலீஷ் அரசாங்கத்திற்குக் குமாஸ்தாக்களை உற்பத்திசெய்து கொடுப்பதற்குப் பயன் படுகிறதே தவிர, பொது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான நாகரீக வளர்ச்சிக்கு ஆதாரமானதாக இல்லை என்பதை நாம் அடிக்கடி கூறிவந்திருக்கிறோம். இங்கிலீஷ் படிப்பின் அவசியத்தைப் பற்றி நாம் பன்முறை வற்புறுத்திக் கூறிவந்திருக்கிறோம். ஆனாலும் இன்றுள்ள கல்வி முறையும், அதை அடிப்படையாக வைத்து உத்தியோகங்களுக்குத் தேர்ந்தெடுக்கும் முறையும மிகமிக ஆபாசமாயிருக்கிறதென்றே கூறுவோம். உதாரணமாக எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் படித்தாலே அதிகம் என்று கூறக்கூடிய குமாஸ்தா வேலைக்கு, பி. ஏ.,க்களும், எம். ஏ.க்களும் எதற்காக என்பதும், ஆரம்ப வகுப்புக்களுக்குக் கல்வியறிவிப்பதற்குச்செகண்டரிகிரேடுகளும், எல். டி. களும் எதற்காக என்பதும் நமக்கு விளங்கவேயில்லை.

இந்தமாதிரி, எவ்விதமான நல்ல காரியத்திற்கும் பயன்படமுடியாத ஒரு கல்விமுறையைப் பயன்படுத்திக்கொண்டு, கேவலமான ஊதியத்திற்கு எந்தச் சிறிய வேலையையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை இம்மாகாணத்தில் உண்டாக்கியிருப்பது பார்ப்பனச் சமுதாயமேயாகும். வட இந்தியாவிற்குச் சென்றுவந்தவர்களும், இம்மாகாணத்தின் பெரிய உத்தியோகஸ்தர்களும் இவ்வுண்மையைப் பலமுறை நம்மிடம் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இந்தக் கல்விக்காக நமது திராவிட மாணவர்களும் போ

ட்டிவிடுவது வருந்தக்கூடிய விஷயந்தான். ஆனாலும் எதாவது ஒரு நல்ல கல்விமுறை வகுக்கப்படுகிறவரையில் நமது மாணவர்களும் இந்த "குமாஸ்தாப் போட்டிப் பந்தயத்தில்" ஈடுபடட்டுமே என்றுதான் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொண்டிருக்கிறோம். பள்ளிகளில் திராவிட மாணவர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நாம் அடிக்கடி கூறுவதும், அதற்காகக் கிளர்ச்சி செய்வதும் எதற்காக என்று கேட்கலாம். சமுதாயத்திற்குப் பலன் தரக்கூடிய, ஒழுங்கான ஒரு கல்விமுறை ஏற்படுகிறவரையில் நமது மாணவர்கள் வெறும் சோம்பேறிகளாகப் போய்விடாமல் எதையாவது கற்றுக்கொண்டிருக்கட்டுமே என்ற மனச்சலிப்பின்மீதுதான் திராவிட மாணவர்களுக்காக வாதாடிக்கொண்டு வருகிறோம்.

ஆனால் நமது கிளர்ச்சியைப் பல்கலைக் கழகத்தாரோ, மந்திரி சபையோ சிறிதும் பொருட்படுத்தியதாகத் தோன்றவில்லை.

உதாரணமாக, 26-6-46 தேதி முடிய சென்னை உயர்தரக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் வகுப்பு வீகிதாச்சாரக் கணக்கை இன்று வேறோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். அதன்படி, சென்னை மாகாணக்கல்லூரி, லயோலாக் கல்லூரி, கிருஸ்துவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, விவேகானந்தர் கல்லூரி ஆகிய 5 கல்லூரிகளிலும் 100க்கு 58 பார்ப்பன மாணவர்களும், 24 திராவிட மாணவர்களும், 13 முஸ்லிம்—கிருஸ்துவ மாணவர்களும், 5 தாழ்த்தப்பட்ட மாணவர்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்பதை அறியலாம்.

100க்கு 3-பேராயுள்ள ஆரியருக்கு 58 மாணவர்கள் என்றால் ஜாதித்திமிர் எந்த அளவுக்கு மிதமிஞ்சிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நம்மால் வர்ணிக்கவும் முடியவில்லை. விவேகானந்தர் கல்லூரி என்னும் ஆரியப் பார்ப்பனர் ஆதிக்க ஸ்தாபனத்தில் 100க்கு 93 பேர் பார்ப்பன மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். திராவிட மாணவர்களோ, 7 பேர்தான் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

விவேகானந்தர் பெயராலும், ராமகிருஷ்ணர் பெயராலும், கல்லூரியாய் காந்தி பெயராலும் வசூலிக்கப்படும் நிதிகளுக்குப் பணம் கொடுக்கும் திராவிடர்களுக்குக் கடுகளவாவது நல்லெண்ணம், மனிதத்தன்மை, சுத்தரத்தம் இருக்கிறதா என்று கேட்கிறோம். வடநாட்டார் பெயரால் நமது திராவிடத்தில் எந்தக் காரியம் நடைபெற்றாலும், அது ஆரிய ஆதிக்கத்துக்குத்தான் பலன் படுகிறது என்பதை நம் திராவிடப் பணமூட்டைகளுக்கு இன்னும் எத்தனை தடவைதான் இடித்திடித்துக் கூறமுடியும்?

இந்த பச்சையப்பன் கல்லூரியில் 100க்கு 37 பார்ப்பன மாணவர்களையும், 50 திராவிட மாணவர்களையும், 13 தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் சேர்த்திருக்கிறார்களாம். போற்றக்கூடியதுதான்! ஆனால் விவேகானந்தர் கல்லூரி நிர்வாகிகளுக்கு உள்ள அளவு தன்மான உணர்ச்சி பச்சையப்பன் கல்லூரி நிர்வாகிகளுக்கு இல்லாமற் போனது எதனால் என்பதைக் கேட்காமலிருக்க முடியவில்லை. அவர்களுக்கு இன உணர்ச்சியில் ஒரு துளியளவாவது இருந்திருக்குமேயானால், இவர்கள் பார்ப்பன மாணவர்களுக்குமேல், ஒரு வகையாவது சேர்த்திருக்கலாமா? பழைய ஜஸ்டிஸ்கட்சித் தலைவர்களில் பலரை நிர்வாகிகளாகக் கொண்டிருக்கும் பச்சையப்பன் கல்லூரி இவ்வாறு பிற்போக்கான முறையில் ஆரியத்திற்குத் தொடை நடுங்குவதைக் காண நமக்கு மிகமிக வெட்கமாயிருக்கிறது. பச்சையப்ப முதலியார் ஒரு திராவிடர்; அதன் நிதிநிர்வாகிகள் திராவிடர்கள்; அந்தக் கல்லூரிக்குப் பணக்கஷ்டம் ஏற்பட்டபோது லாட்டரி சீட்டுகளை வாங்கியவர் அத்தனைபேரும் திராவிடர்கள் என்பதை எண்ணும்போதெல்லாம் நாம் அளவுகடந்த மகிழ்ச்சி அடைகிறோம்; பெருமையும் படுகிறோம். ஆனால் 100க்கு 37 பார்ப்பன மாணவருக்கு இடம் கொடுத்துவிட்டார்கள் என்பதை உணரும்போது, அவமானத்தால் மனமுடைந்து தலைகுனியவேண்டியிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு புள்ளி விவரத்தையும் அறிந்துகொள்ள விரும்புகிறோம். சென்னையில் தொண்டைமண்டல ஹைஸ்கூல் என்ற திராவிடர் ஸ்தாபனம் ஒன்றிருக்கிறது. அதிலுள்ள மொத்த ஆசிரியர்கள் எத்தனைபேர்? இவர்களில் ஆரியப்பார்ப்பனர்கள் எத்தனைபேர்? திராவிடர் எத்தனைபேர்? என்பதை அறிய விரும்புகிறோம். இதே சென்னையிலேயே முழுதும் ஆரிய நிர்வாகிகளையேகொண்ட திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல், மைலாப்பூர், பி.எஸ். ஹைஸ்கூல் ஆகிய இரண்டு உயர்தரக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் உள்ள ஆசிரியர்களில் ஆரியர் எத்தனை பேர்? திராவிடர்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Edited Printed and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.